# வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள ஆரம்பத்தர திணைக்கள சேவைப் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்-2018

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 01.01.2013 இல் வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஆளணிகளுக்கமைவாக கீழ்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின்கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 06.06.2018 ஆகும்.

| பதவி இல | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தெரிவு முறை | சம்பளக் குறியீடும் அளவுத்திட்டமும் |
|---|---|---|---|---|
| 01 | பரிசாரகர் (ஆண்) | 3 | திறந்த அடிப்படை- 70%<br>மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படை- 30% | PL 2-2016<br>25,250-10*270-10*300-10*330-12*350-38,450/- |
| 02 | பரிசாரகர் (பெண்) | 7 | | |
| 03 | சமையலாளர் | 1 | | |
| 04 | மின்னியலாளர் | 1 | | |
| 05 | தொழிலாளி (ஆண்) | 4 | திறந்த அடிப்படை- 100% | PL 1-2016<br>24,250-10*250-10*270-10*300-12*330-36,416/- |
| 06 | தொழிலாளி (பெண்) | 1 | | |
| 07 | சுகாதாரத் தொழிலாளி | 1 | | |
| 08 | காவலாளி | 1 | | |

## சேவை நிபந்தனைகள்:

01. இப்பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
02. நியமனம் பெறுபவர்கள் மூன்று (03) வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.
03. விதவைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
04. இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்படாத திணைக்கள சேவைகளாகும்.

## அடிப்படைத் தகைமைகள்:

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்ப முடிவுத்திகதியின் உடன் முன்னதான ஆறு வருடங்களில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் வடக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும். (நேர்முகப்பரீட்சையின்போது வாக்காளர் பட்டியலின் பிரிதெடுப்பிதழின் மூலம் நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும்)

    **அல்லது**

    விண்ணப்பதாரி அல்லது விண்ணப்பதாரியின் பெற்றோர் வடக்கு மாகாணத்தில் பிறந்திருப்பதுடன் ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும். (நேர்முகப்பரீட்சையின்போது வாக்காளர் பட்டியலின் பிரிதெடுப்பிதழின் மூலம் நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுதல் வேண்டும்)

03. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதிற்குக் குறையாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

03. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருப்பதுடன், வடக்குமாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பதாரி சகல தகைமையினையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

## ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:

01. வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீடசையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## <u>திறந்த அடிப்படை</u>

### கல்வித்தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள்

### அ. கல்வித்தகைமை

1. க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரு திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஏதாவது ஒரு அமர்வில் ஐந்து பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### ஆ. தொழிற்தகைமைகள்

**i. பரிசாரகர் (ஆண் / பெண்)**

நோயாளிகளைக் கவனித்தல் தொடர்பாக அரச வைத்தியசாலையில் அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் வைத்தியசாலையில் ஒரு வருட சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு:-** மேற்குறித்த தகைமைகளுடன் கூடிய வகையில் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து கல்வித்தகைமையுடன் பரிசாரகர் பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் அனுபவத்தைக் கொண்டிருப்பவர்களையும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டிருப்பார்.

**ii. சமையலாளர்**

விண்ணப்பதாரி அரச நிறுவனமொன்றில் அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு மாதகால சமையல் தொடர்பான கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரி அரசினால் அனுமதிக்கப்பட்ட விடுதி / நிறுவனம் ஒன்றில் சமையல் தொழில் புரிந்த மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு:-** மேற்குறித்த தகைமைகளுடன் கூடிய வகையில் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து கல்வித்தகைமையுடன் சமையலாளர் பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் அனுபவத்தைக் கொண்டிருப்பவர்களையும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டிருப்பார்.

**iii. மின்னியலாளர்**

விண்ணப்பதாரி அரச அனுமதி பெற்ற நிறுவனமொன்றில் மின்னியல் தொடர்பாக குறைந்தது மூன்று மாதகால கற்கைநெறியினை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

a. அரச / அரசசார்பற்ற நிறுவனமொன்றில் மின்னியல் சம்பந்தமான பதவியொன்றில் மூன்று வருடகால சேவை அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

b. மின்சார விநியோகம், மின் இணைப்பு தொடர்பாக உபாயமுறைகள் பற்றி விளங்கிக்கொள்ளக் கூடியவராய் இருத்தல் வேண்டும்.

c. விண்ணப்பதாரி மின் விநியோகம் தொடர்பான கட்டுமான திருத்தங்களை மேற்கொள்வதற்கான இயலுமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படை**

1. கைதடி அரச முதியோர் இல்லத்தில் தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளி மற்றும் காவலாளி என்போர் விண்ணப்பிக்க முடியும்.
2. முன்னைய சேவையில் குறைந்தது ஐந்து வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினை பூர்த்திசெய்திருப்பதுடன் ஐந்து சம்பள ஏற்றங்களை தொடர்ச்சியாக உழைத்துப்பெற்றிருத்தல் வேண்டும்.
3. **தொழில் தகைமைகள்**

**a. பரிசாரகர்**

கைதடி அரச முதியோர் இல்லத்தில் குறைந்தது ஆறு மாதகால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**b. சமையலாளர்**

விண்ணப்பதாரி அரச நிறுவனமொன்றில் அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடகால சமையல் தொடர்பான கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

கைதடி அரச முதியோர் இல்லத்தில் குறைந்தது ஒரு வருடகால சமையலாளர் சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**c. மின்னியலாளர்**

அரசினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மின்னியல் தொடர்பாக குறைந்தது மூன்று மாதகால கற்கைநெறியினை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

## விண்ணப்பிக்கும் முறை:

01. A4 அளவிலான மாதிரி விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.
02. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும்.
03. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத் திகதியான 06.06.2018 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக **"செயலாளர், மகளிர் விவகார சமூகசேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம், இல 04 புரூடி ஒழுங்கை, புங்கன்குள சந்தியடி, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்."** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்

மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

04. தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பம் என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. விண்ணப்பங்கள் உரியமுறையில் தேவையான தகவல்கள் தெளிவாக பூரணப்படுத்தப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத தெளிவற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
06. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளுக்கமைவாக விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என, நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்திற்குப் பின்னராகவோ, அல்லது நியமனத்தின் போதோ ஏதேனும் தகவல்கள் பொய்யானது எனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் மாகாண அரச நியமனமும் நிறுத்தப்படும்.
07. நியமிக்கப்படுவோர் எண்ணிக்கையும், நியமனத் திகதியும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.
08. சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான முடிவு நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**செயலாளர்,**

மகளிர் விவகார சமூகசேவைகள் அமைச்சு,

வடக்கு மாகாணம்.